# பகவான் குபேரனின் கதை

## சாந்திப்பிரியா



அனைவருமே லட்சுமி தேவிதான் செல்வத்தின் அதிபதி என்றே நினைக்கின்றார்கள் என்றாலும் லட்சுமி தேவி அதிர்ஷ்டத்தின் அதிபதி மட்டுமே. அவளது செல்வத்தை பாதுகாத்து பராமரிப்பது பகவான் குபேரனே. அதிர்ஷ்டமும் செல்வமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்தான், ஒன்றோடு

ஒன்று இணைந்த பொருள் கொண்டது என்பதினால் இப்படிப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

வேத காலத்தில் பகவான் குபேரன் ஒரு தெய்வமாக வணங்கப்பட்டு இருந்திருக்கவில்லை என்றாலும் பிற் காலத்தில் ஆலயங்களில் குபேர வழிபாடு தொடங்கியது. பகவான் குபேரனே செல்வம், அதிருஷ்டம் மற்றும் மகிழ்ச்சியின் அதிபதி என்பதாக கருதப்பட்டு ஹிந்து மதத்தைத் தவிர பௌத்த மதம் மற்றும் ஜைனிய மாதங்களில் அவரை பல்வேறு பெயர்களில் அழைத்து வணங்குகின்றார்கள்.

பகவான் குபேரனின் தோற்றம் பிற கடவுட்களில் இருந்து மாறுபட்டது . அவர் கூன் போட்ட, குள்ள உருவில் , மூன்று கால்களுடன், ஒரு கண் மாற்றத்தை விட சிறியதாகவும் காணப்படுபவர். முதலில் பகவான் குபேரன் ஒரு தெய்வமாகவோ, துணை தெய்வமாகவோ, அல்லது தேவ கணமாகவோ கூட கருதப்படவில்லை. அவரை அன்றைய ஸ்ரீ லிங்காவை ஆண்டு வந்திருந்த அசுரர்களின் வம்சத்தை சேர்ந்த ஒரு அரசர் என்றே நினைத்தார்கள். பகவான் குபேரனுடைய ஒன்று விட்ட சகோதரர்கள் ராமாயணத்தில் கூறப்படும் ராவணன், கும்பகர்ணன் மற்றும் விபீஷணர்கள் ஆவர். அவரிடம் இருந்த மிகவும் விசேஷமான பறக்கும் தேரினை ராவணன் பிடுங்கி கொண்டு விட்டான். பகவான் குபேரனின் விசேஷ தேரை ராவணன் பிடுங்கி கொண்டதின் காரணம் அது எங்கு வேண்டுமானாலும் பறந்து செல்லும் சக்தி கொண்டது. அது இருப்பவரிடம் செல்வம் கொழிக்கும். ஆகவே அதை வைத்துக் கொண்டுதான் தான் செய்த தீய செயல்களுக்கு ராவணன் பயன்படுத்திக் கொண்டாலும், அதை இராமாயண யுத்தம் முடிந்த பின் பகவான் ராமபிரான் மீண்டும் பகவான் குபேரனுக்கு திருப்பித் தந்து விட்டார்.

பகவான் குபேரனுக்கு ஒரு கண் சிறியதாக ஆனதற்கும், உடம்பு கோணலாக உள்ளதற்கும் ஒரு காரணக் கதை உண்டு. ஒருமுறை பகவான் குபேரன் கைலாயத்துக்கு சென்றபோது அங்கு பார்வதி தேவியுடன் சிவபெருமான் குதூகுலமாக இருந்ததைக் கண்டார். பார்வதி தேவியின் அழகைக் கண்ட

பகவான் குபேரன் அதில் மயங்கி, வாயில் வழிந்த ஜொள்ளுடன் தன் கண்களை தன்னை அறியாமலேயே சிமிட்டினார். அதைக் கண்ட பார்வதி தேவியானவள் அவர் தன்னை காமத்துடன் நோக்குகிறார் என எண்ணி, இனி அவர் அலங்கோலமான உருவில்தான் காட்சி தருவார் என்று சாபமிட்டு விட்டாள். உடனேயே பகவான் குபேரரின் தோற்றம் அலங்கோலமான ஒரு கூனர் உருவில் மாறியது.

ஆகவே தனது சாபத்தை விலக்கிக் கொள்ள திருக்கோளூர் ஆலய இடத்துக்கு சென்று அங்கு தவத்தில் அமர்ந்து விட்டார். திருக்கோளூர் ஆலயம் உள்ள இடம் அந்த காலத்தில் ஒரு அடர்ந்த காட்டு பிரதேசம் ஆகும். தற்போது அந்த ஆலயம் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகும். அங்கு சென்று தவத்தில் இருந்த பகவான் குபேரன் முன் பார்வதி தேவி தோன்ற பகவான் குபேரரும் தான் அவரை எந்த விதமான தவறான நோக்கத்திலும் பார்க்கவில்லை என்றும் தன்னை மன்னித்து தனது சாபத்தை விலக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள, அவளும் அவரது கண்களை திரும்பக் கொடுக்க அந்த கண் இன்னொரு கண்ணை விட சிறியதாக அமைந்து விட்டது. மேலும் பகவான் குபேரனுக்கு தெய்வ அந்தஸ்து கொடுத்து வடக்கு திசையின் அதிபதியாகவும், அங்கிருந்தபடி அவர் லட்சுமி தேவியின் செல்வத்தை பாதுகாத்துக் கொண்டு இருக்கும் பகவானாக இருக்கவும் அவரை நியமித்தார்.இப்படியாக அவருக்கு தெய்வ அந்தஸ்து கிடைத்தது.

அதை போலவே இன்னொரு கதையும் உள்ளது. அந்த கதையின்படி பகவான் குபேரனின் தவத்தை மெச்சி அவர் முன் காட்சி அளித்த பார்வதி தேவி அவரது சாபத்தை ஓரளவே நீக்கி விட்டு, சாபம் முழுவதும் விலக நிதி மற்றும் செல்வத்துக்கு அதிபதியான பகவான் விஷ்ணுவை நினைத்து தபம் செய்யுமாறு கூறினாள். அவரும் அதை செய்ய அவருடைய சாபம் முற்றிலும் விலகியது. தெய்வ அந்தஸ்த்து கிடைத்தது.

பகவான் குபேரன் கூனராக இருந்ததினால் பல இடங்களுக்கும் அவரால் செல்ல முடியவில்லை என்பதினால் பகவான் பிரும்மாவை நினைத்து கடும் தவம் புரிந்தார். அதைக் கண்டு மனம் மகிழ்ந்த பகவான் பிரம்மனும் தெய்வ

சிற்பியான விஸ்வகர்மாவை அழைத்து அவருக்கு பறக்கும் புஷ்பக விமானத்தை தயாரித்து கொடுக்க கூறி அது தயாரானதும் அதை பகவான் குபேரனுக்கு அளித்து தெய்வம் என்ற அந்தஸ்தையும் தந்தாராம். அதை போலவே இன்னொரு கதையும் உள்ளது. அந்த கதையின்படி ஒருமுறை ஒரு சிவாலயத்தில் கூனராக இருந்தாலும் பகவான் குபேரன் திருடச் சென்றாராம். ஆனாலும் அவர் விடா முயற்சியுடன் தனது காரியத்தில் கண்ணாயிருந்ததினால், அதைக் கண்டு மகிழ்ந்து போன சிவபெருமான், பகவான் குபேரர் திருட வந்தாலும் அந்த பாவத்தை விலக்கி அவருக்கு தெய்வ அந்தஸ்தை பகவான் சிவபெருமான் கொடுத்தாராம்.

பகவான் விஷ்ணு ஒரு காலத்தில் பகவான் வெங்கடேச பெருமான் அவதாரத்தில் இருந்தபோது லட்சுமி தேவியை மீண்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் வந்த கட்டத்தில் தனது கல்யாண செலவிற்காக பகவான் சிவபெருமான் மற்றும் பகவான் பிரும்மாவின் முன்னிலையில் பகவான் குபேரனிடம் கடன் வாங்கினாராம். இந்த விரிவான கதையை பகவான் வெங்கடாசலபதி ஜீவ சரித்திரத்தில் படிக்கலாம். அவர் வாங்கிய அந்த கடனை அடைக்கும்வரை அந்த கடனுக்கான வட்டியை கலிகாலத்தில் அவருடைய பக்தர்கள் தருவார்கள் என்று ஒப்பந்தத்தத்தில் கையெழுத்து போட்டுத் தந்தாராம். அதனால்தான் திருப்பதியில் பக்தர்கள் தரும் காணிக்கை பகவான் வெங்கடாசலபதியின் கடனுக்கான வட்டி எனும் புனிதமான காணிக்கை எனக் கருதப்படுகின்றது .

# The story of Lord Guber

## Santhipriya



There is misconception that Goddess Lakshmi is Goddess of wealth, while the fact is otherwise. Lord Guber is keeper of wealth and Goddess Lakshmi is Goddess of fortune. Goddess Lakshmi grants wealth and Lord Guber account them and distribute them as directed, as the wealth is under the custody of Lord Guber. Since the meaning of both fortune and wealth are associated and interlinked with each other, the misconception is wide spread.

It is surprising that an important deity like Lord Guber has not been widely worshipped in Vedic period, and only in the later years, his importance has been realized and in few of the temples his worship has also begun. Lord Guber is one divine who has been accepted as Lord of wealth, happiness and fortune, but in different names and slight change in appearance in all three religions such as Hinduism, Buddhism and in Jainism.

Lord Guber's appearance was quite different from that of other divines as he appear with deformed body like a dwarf. He is featured with three legs and set of only eight teeth and one of his eye is distinctly smaller than the other in Hinduism while in other religions, he is seen in the posture of laughter, but a short, stout personality.

Originally Lord Guber was not considered divine, not even semi or demi god or celestial in status. He got the status of demi god much later. He belonged to the clan of the Rakshasas (Demons or Asuric forces) who ruled the then Lanka before Demon King Ravan took over the reins after overthrowing Lord Guber who had a magic chariot which did wonders including generating wealth. Guber's half-brothers were Ravana, Kumbhakarna and Vibhishana, all three of Ramayana fame. Ravan stole magic chariot Pushpaka from Lord Guber since it not only flew anywhere one desired, but also gave enormous wealth to the one who possessed it. Ravan misused it to further his nefarious activities during Ramayana era. However after the war ended Lord Ram ensured that Lord Guber got back his chariot.

There is an interesting story on how Lord Guber got one of his eyes impaired, body deformed and attained divine status. Once when Lord Guber went to Mount Kailas, he happened to see Lord Shiva spending happy moments with his consort with Goddess Parvathi. Amazed to see the splendour and beauty of Goddess Parvathi, one of his eyes winked itself in admiration of her beauty as he drooled. Goddess Parvathi mistook that he looked at her with drooling eyes out of lust and cursed that he would always look ugly. Immediately he turned into a ventricose dwarf displaying ugly teeth and lost all nine kinds of wealth.

In order to overcome the curse, he went to the present Tirukolur temple site (which is in Tirunelveli district in Tamilnadu, India) which was a forest then and penanced seeking pardon. Tirukolur temple is one out of 108 Divya Desam temples. When the Goddess appeared before him, Lord Guber pleaded with

Goddess Parvathi to forgive him and explained that he had not seen the Goddess with any evil intention and his eyes winked out of anxiety. Accepting his plea, Goddess Parvathi forgave Guber and blessed his eye grew back, but it was smaller than the other one. Further taking pity on him he was rewarded to be the guard of Northern direction and lord to control and maintain the wealth and material of Goddess Lakshmi. Thus he attained divine in status.

As per another legend Goddess Parvathi after partially removing the curse on his appearance asked him to pray to Lord Vishnu to get back the wealth since he was custodian of Nidhi called wealth. Hence Lord Guber went to Tirukolur temple site which was a forest then and prayed to Perumal (Lord Vishnu) and got the lost wealth redeemed.

Since Lord Guber was deformed and faced difficulty in moving around. Lord Brahma took pity on him and ordered Viswakarma, the architect of the divines to build an aerial chariot called Pushpaka Vimana in which he moved and threw jewels and other precious objects to people who prayed to him to aid them avert poverty.

One other legend tells that it was Lord Brahma who gave Lord Guber the status of divine after Lord Guber, who was half-brother to Ravan, Lord Guber performed stringent penance seeking boon of divine status from Lord Brahma. In yet an other legend, Lord Guber was a dwarf and attempted to rob a Shiva temple in mid of night and his effort did not succeed. However seeing his perseverance, pleased Lord Shiva granted him the divine status.

Once Lord Venkateswara who was incarnate of Lord Vishnu, took loan from Lord Guber to meet his marriage expenses with Goddess Lakshmi, in the presence of Lord Shiva and Lord Brahma promising that the principle amount would be repaid to him till which time his devotees (of Lord Venkateswara) would continue to pay the interest on behalf of Lord Venkateswara in Kaliyug. (The detailed story can be read in Venkatachalapathi Charithra). In view of this in Tirupathi Tirumala temple (Tirupathi Balaji temple in India) the offers of the devotees go to wipe off Lord Vishnu's loan and is therefore their offerings remain spiritually meritorious.